2014 ஜூலை 11]

ஆம்புலன்ஸுடைய சேவையைப் பயன்படுத்திக்கொள்ளும் வாய்ப்பை மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் உருவாக்கியிருக்கிறார்கள். மேல் சிகிச்சை தேவைப்படின் உடனடியாக சிறப்பு மருத்துவமனைக்கு அந்நோயாளிகள் மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களுடைய இந்தச் சிறப்பான திட்டத்தின் மூலமாக அனுப்பி வைக்கப்படுவார்கள் என்ற செய்தியையும் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[**குறிப்பு**: ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடம்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

2. வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் 10–7–2014 அன்று பயன்படுத்திய வார்த்தையை நீக்கக் கோருதல்

திரு. அழகாபுரம் ஆர். மோகன்ராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . .

திரு. துரைமுருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே . . .

(தேசிய முற்போக்கு திராவிட கழக உறுப்பினர்கள் மற்றும் திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் இருக்கையைவிட்டு எழுந்து நின்றனர்.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஒவ்வொருவராகச் சொல்லுங்கள். (குறுக்கீடு) திரு. மோகன்ராஜ், சொல்லுங்கள்.

***திரு. அழகாபுரம் ஆர். மோகன்ராஜ்**: மவுலிவாக்கம் கட்டட விபத்து சம்பந்தமான ஒத்திவைப்புத் தீர்மானத்திற்கு நேற்று நீங்கள் எங்களுக்குப் பேச அனுமதி மறுத்தீர்கள். ஜனநாயக முறைப்படி வெளிநடப்புச் செய்தோம். நாங்கள் வெளியே போனதற்குப்பிறகு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஓடுகாலிகள் என்று பேசியிருக்கிறார்கள். (குறுக்கீடுகள்)

TRUTH ALONE TRIUMPHS

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதெல்லாம் ஒன்றுமில்லை. இல்லை, இல்லை (குறுக்கீடு) திரு. துரைமுருகன், என்ன சொல்லுங்கள். (குறுக்கீடு) சரி உட்காருங்கள். (குறுக்கீடு)

[தேசிய முற்போக்கு திராவிட கழக உறுப்பினர்கள் (திரு. சி. மைக்கேல் ராயப்பன், திரு. செ. அருண்பாண்டியன், திரு. ஆர். சுந்தர்ராஜன், திரு. க. பாண்டியராஜன், திரு. க. தமிழழகன், திரு. டி. சுரேஷ்குமார், திருமதி ஆர். சாந்தி மற்றும் திரு. மு. அருண் சுப்பிரமணியன் தவிர) அவையிலிருந்து வெளியேறினர்.]

***திரு. துரைமுருகன்**: நானும் தங்களுடைய கவனத்திற்கு என்ன சொல்கிறேன் என்றால், ஜனநாயகத்தில், சட்டமன்றத்தில் வெளிநடப்பு செய்வது என்பது ஒத்துக்கொள்ளப்பட்ட ஒன்று. வெளிநடப்பு செய்வார்கள். திரும்ப உள்ளே வருவார்கள். நீங்களும் எதிர்க்கட்சியாக இருக்கும்போது செய்திருக்கிறீர்கள். நாங்களும் அனுமதித்திருக்கிறோம். ஆனால், வெளியே போனவர்களைப் பார்த்து ஒரு மாண்புமிகு அமைச்சர் ஓடுகாலிகள் ஓடிவிட்டார்கள் என்று சொல்வது இந்த அவைக்கு ஏற்றதா? நான் நினைத்தேன். தாங்கள் நீண்டநாள் உறுப்பினர், தங்களுக்கு அந்தக் கண்ணியம் உண்டு. நீங்களே அதைச் சபைக் குறிப்பிலிருந்து நீக்கியிருப்பீர்கள் என்று கருதினோம். ஆனால் பத்திரிகையிலே வந்திருக்கிறது. இதை வெளியிலே படிக்கிறவர்கள் நமது அவையைப் பற்றி அல்லது தரத்தைப் பற்றி என்ன நினைப்பார்கள்? அல்லது மாண்புமிகு அமைச்சரைப் பற்றித்தான் என்ன நினைப்பார்கள்? எனவே, இன்றைக்காவது நீங்கள் அதை எடுத்துவிட்டால் சரியாக இருக்கும் என்பதுதான் எனக்கிருக்கின்ற எண்ணம். ஆகையினாலே, தாங்களும் இருக்கிறீர்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் இருக்கிறார்கள். நம்முடைய அவையின் கண்ணியத்தை எண்ணியாவது அதை நீக்கவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்று அவர்கள் கொடுத்திருந்த ஒத்திவைப்புத் தீர்மானம் மற்றும் கவன ஈர்ப்புத் தீர்மானம் எனது துறையைச் சார்ந்தது. எனது மானியக் கோரிக்கையில் அவர்கள் கேட்கும் கேள்விகளுக்கு நான் பதில் சொல்கிறேன், அமைதியாகக் கேளுங்கள். எனது பதில் திருப்தி இல்லையென்றால், நீங்கள் எந்த நடவடிக்கை வேண்டுமானாலும் எடுத்துக்கொள்ளுங்கள் என்று சொன்னேன். அதைக் கேட்காமல் கூச்சலும் குழப்பமும் போட்டுவிட்டு வேகமாகப் போனார்கள். ஓடுகாலிகள் ஓடுகிறார்கள் என்று சொன்னேன். அதில் தவறில்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு அமைச்சர் என்ன இல்லாததைக் கூறிவிட்டார்? என்ன, எல்லோரும் எழுந்துவிட்டீர்கள்? உட்காருங்கள். அவரை* allow *பண்ணியிருக்கிறேன் இல்லையா? பேசிக்கொண்டிருக்கிறார் இல்லையா? அனுமதியில்லாமல் எழுந்தால் எப்படி? (குறுக்கீடுகள்) உட்காருங்கள். உட்காருங்கள் எல்லோரும். நான் நிற்கிறேன் இல்லையா? நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேண்டுதல்தான் வைத்தேன். என் பதிலைச் சொல்கிறேன். இருந்து கேளுங்கள். தைரியம் இருக்கிறதா? இல்லையா? என் பதிலுக்குப் பதிலைச் சொல்லுங்கள் என்று சொன்னேன். அதைக் காதில் வாங்கிக்கொள்ளாமல், கூச்சல் குழப்பமிட்டு அவையை அவமதிக்கின்ற வகையில் நடந்துகொண்டதால் 'ஓடுகாலிகள் ஓடுகின்றார்கள்' என்று சொன்னேன். (குறுக்கீடுகள்)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *இல்லை. (குறுக்கீடு) அது* unparliamentary word *இல்லை. (குறுக்கீடுகள்) அதை நான்தான் முடிவு செய்ய வேண்டும். அதை நான்தான் முடிவு செய்ய வேண்டும். நீங்கள் அதையெல்லாம் கேட்கக்கூடாது. உட்காருங்கள். (குறுக்கீடு) உட்காருங்கள். அதெல்லாம் ஒன்றுமில்லை. உட்காருங்கள்.*